**R5350**

## THE SIN OF COVETOUSNESS

# பொருளாசையாகிய பாவம்

யோசுவா 7

“உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும்.”– எண்ணாகமம் 32:23

இஸ்ரயேலர்கள் முழு விசுவாசத்துடனும் எரிகோவின் வெற்றியுடனும் கானானை ஜெயங்கொள்ளும்படி தொடர்ந்தார்கள். வேவுக்காரர்கள் ஆயி பட்டணத்திற்கு அனுப்பப்பட்டனர். இவர்கள் திரும்பி வந்து இடம் சிறியதாக இருந்ததால் அதைப்பிடிக்க இரண்டு அல்லது :மூன்று ஆயிரம் பேர் போதும் என்று கூறினார்கள். உண்மையிலேயே எரிகோவின் அனுபவத்தால், இஸ்ரயேலர் யாரும் கொல்லப்பட மாட்டார்கள் என்று எதிர்பார்த்தார்கள். மேலும் அவர்களது எதிரிகள் திகில் பிடித்து இருந்ததால் அதிகம் எதிர்ப்பு இருக்காது என்றும் எதிர்பார்த்தனர். ஆனால் ஆயியின் அனுபவம் தலைகீழாக இருந்தது. இஸ்ரயேலர்கள் முப்பத்து ஆறு பேர் கொல்லப்பட்டனர். இஸ்ரயேலின் சேனை கர்த்தரின் தயவு இல்லை என்பதை உணர்ந்து சத்துருக்களுக்கு முன்பாக முறிந்தோடிப்போனார்கள்.

யோசுவாவும் அவரது கூட்டாளிகளுமான இஸ்ரயேலின் மூப்பர்களும் இதனிமித்தம் கலக்கமடைந்தார்கள். கஷ்டத்திற்காக துக்கித்து, எதிரிகள் தோல்வியடைய வேண்டியிருக்க, அதற்கு மாறாக எதிரிகளை உற்சாகப்படுத்தி தேவனுடைய விசேஷித்த ஜனங்கள் உற்சாகம் கெடுக்கப்பட்ட துக்கத்தினால் பயந்து அவர்கள் உடன்படிக்கை பெட்டியின் முன்னால் முகங்குப்புற விழுந்தார்கள்.

### சாபத்தீடானவைகள் அல்லது அர்ப்பணிப்பானவைகள்

நமது பொதுவான மொழி பெயர்ப்பிலும் அர்ப்பணிப்பானவை என்பதற்கு பதிலாக சாபத்தீடானவை என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களது துரோகத்தினால் இஸ்ரலேயர்கள் தேவ கிருபையை இழந்தார்கள் என்று கர்த்தர் யோசுவாவிடம் கூறினார். எரிகோ பிடிக்கப்பட்ட போது இஸ்ரயேல் வீரர்களில் ஒருவன் கொள்ளைப் பொருட்களில் ஒன்றை எடுத்துக்கொண்டான். கர்த்தருடைய ஏற்பாட்டின்படி கொள்ளைப் பொருட்கள் எல்லாம் முன்னரே அர்ப்பணிக்கப்பட்டவைகள். ஆகையால் இது அவர்களது உடன்படிக்கையை மீறின செயலாக இருந்தது. இந்த காரியம் நிவர்த்திப்பண்ணப்படும் வரை இஸ்ரயேலரின் சேனை ஆசீர்வாதத்தை பெறாது.

ஜனங்கள் அனைவரும் பாடத்தை கற்றுக்கொள்ளும் படியாக, குற்றம் செய்த கோத்திரத்தை கண்டுபிடிக்கும்படி அனைத்து கோத்திர பிரதிநிதிகளையும் அவருக்கு முன்பு கூடி சீட்டு போடும்படி கர்த்தர் கட்டளையிட்டார். இதே விதத்தில் அனைத்து குடும்பமும் சோதிக்கப்பட்டு தவறிழைத்த குடும்பம் கண்டு பிடிக்கப்பட்டது. இப்படியாக படிப்படியாக காரியம் ஆகான் மேல் வந்தது. பிரச்சனைக்கு காரணவாளியாக, குற்றவாளியாக குறிக்கப்பட்டான்.

“யோசுவா, ஆகானை நோக்கி: மகனே, நீ இப்போது இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தரை மகிமைப்படுத்து, அவருக்கு முன்பாக அறிக்கை பண்ணி, நீ செய்ததை எனக்குச் சொல்லு; அதை எனக்கு ஒளிக்காதே என்றான். அப்பொழுது ஆகான் யோசுவாவுக்கு பிரதியுத்தரமாக: மெய்யாகவே நான் இஸ்ரயேலின் தேவனாகிய கர்த்தருக்கு விரோதமாக பாவம் செய்தேன். இன்னின்ன பிரகாரமாக செய்தேன். கொள்ளையிலே நேர்த்தியான ஒரு பாபிலோனிய சால்வையையும், இருநூறு வெள்ளிச் சேக்கலையும் ஐம்பது சேக்கல் நிறையான ஒரு பொன்பாளத்தையும் நான் கண்டு, அவைகளை இச்சித்து எடுத்துக்கொண்டேன். இதோ, அவைகள் என் கூடாரத்தின் மத்தியில் பூமிக்குள் புதைந்திருக்கிறது. வெள்ளி அதன் அடியிலிருக்கிறது என்றான்.”

### ஆகான் மீது தண்டனை

கல்லெறியுண்டு மரிப்பதே ஆகானின் மீதான தண்டனையாக இருந்தது. கல்லெறிந்து அவைகளை அக்கினியினால் சுட்டெரித்தார்கள். எரித்தல் எதிர்கால நம்பிக்கை அவனுக்கு இல்லாததைக் குறித்தது. எனினும் இயேசுவின் மரணத்தினால் அளிக்கப்பட்ட இரட்சிப்பில் மனுக்குலத்தில் மற்ற அனைவருக்கும் கிடைக்கும் பங்கு ஆதாமின் குடும்பத்தின் அங்கமாக ஆகானுக்கும் கிடைக்கும் என்றும் இது ஒரு உருவகமாக இருந்தது என்றும் நாம் கருதுகிறோம். இப்படியாகத்தான் சோதோமியர்கள் வானத்திலிருந்து வந்த அக்கினியால் அழிக்கப்பட்டார்கள். அது இரண்டாம் மரணத்தில் மரிக்கும் வகுப்பாரை உருவகமாக குறித்தது. ஆனால் ஆதாமிய மரணமாகிய முதல் மரணத்திலிருந்து விடுதலையடையாமல் யாரும் இரண்டாம் மரணத்திற்கு செல்ல முடியாது. இவைகள், தெரிந்தே தீமை செய்த வகுப்பாரை ஒரு நிழலாக முன்னடையாளமாக காண்பிக்கின்றன. இவர்கள் புத்தியற்ற மிருக ஜீவன்களைப் போல நித்திய அழிவில் கெட்டழிந்து போவார்கள்.

சோதோமியர்களைப் போல ஆகானும் இயேசுவின் மூலம் ஆசீர்வாதத்தையோ அறிவையோ அனுபவிக்கவில்லை. மேசியாவின் யுகத்தில் சோதோமியர்களைப் போல இயேசுவின் பலியின் புண்ணியத்தினால் மரண நித்திரையிலிருந்து எழுப்பப்பட்டு மீட்படைவார்கள். அவர்களது அனுபவம் கோராசீன் மற்றும் பெத்சாயிதாவின் அனுபவங்களைக் காட்டிலும் மிகவும் தாங்கக்கூடியதாக இருக்கும். அதே போல் ஆகானுக்கும் இருக்கும். அப்போஸ்தலர்கள் அறிவிப்பது போல, கடந்த கால இந்த நிழலான அனுபவங்கள் அழிவுக்கு ஒரு உதாரணமாக வைக்கப்பட்டிருந்தன. அறிந்தே, தெரிந்தே அறிவுடன் கர்த்தருடைய வழிகளை நிராகரிக்கிற அனைவருக்கும் இதுவே முடிவான தண்டனையாக இருக்கும். (1கொரிந்தியர் 10:11; யூதா 7)

## நமது நாளில் பொருளாசை

உலக சரித்திரத்திலேயே நமது நாட்களைப் போல பொருளாசையுள்ள காலம் இருந்ததில்லை. ஆகான் செய்ததிலிருந்து மிகவும் வித்தியாசமாக செய்பவர்கள் எந்த தேசத்திலும் எந்த நகரத்திலும் சிலர் இருப்பார்கள். இப்படிப்பட்ட அனைவரும் கல்லெறியுண்டு எரிக்கப்பட்டால் உலகமானது ஒரு பெரிய ஈமச்சடங்கு சிதையாக இருக்கும் உண்மைதான். பயத்தினால் இப்படிப்பட்ட தண்டனை அவர்களால் தடுக்கப்படவில்லை. எனினும் அதில் பெரும்பாலானோர் இப்படிப்பட்ட பாவங்களுக்கு நித்திய ஆக்கினையே தண்டனை என்று நம்புகிறார்கள். ஆம், ஆகானின் கல்லெறிதலில் யோசுவாவையும் இஸ்ரயேலர்களையும் கண்டனம் செய்ய தயாராயிருக்கிற அநேகர், அன்பின் சகல கிருபைகளின் தேவன், சகல இரக்கங்களின் பிதா இரட்சகருடன் உயர்ந்த உறவுக்குள் வந்திருக்கிற சகல பரிசுத்தவான்களைத் தவிர்த்து மற்ற முழு மனித குடும்பங்களுக்கும் ஆகானைக் காட்டிலும் பத்து மடங்கு மோசமானவைகளைச் செய்வார் என்று நம்ப தயாராயிருக்கிறார்கள்.

ஐயோ, நமது சிந்தை எந்தஅளவுக்கு திரிக்கப்பட்டிருக்கின்றன வேதாகமத்தின் போதனைகள் என்று தவறாக எண்ணிக்கொண்டிருந்தவைகளையும், இருண்ட காலத்திலிருந்து நமக்கு கொடுக்கப்பட்டு வந்த தப்பறையான போதனைகளையும், பிசாசுகளின் தவறுகளையும் ஓரளவுக்கு நீக்கி, உண்மையான வெளிச்சம் இப்பொழுது பிரகாசித்துக் கொண்டிருக்கிறதற்காக நாம் எவ்வளவு சந்தோஷப்படுகிறோம்!

## அர்ப்பணம் செய்தவர்களிடத்தில் பொருளாசை

யோர்தான் அர்ப்பணத்தை குறிக்கிறது என்பதையும், யோர்தானைக் கடந்தவர்கள் நிழலாக, தேவனுடன் ஒரு உடன்படிக்கைக்குள் நுழைந்து, பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களை குறிப்பிடுகிறார்கள் என்பதையும், கானானின் வெற்றிகள் அர்ப்பணம் செய்தவர்களுக்கு இருதய கோட்டையின் சிந்தைக்கு அடிபணிதலுக்குமான ஆவிக்குரிய போராட்டத்தையும் நாம் நினைவு கூரும் போது ஆகானின் பாவம் ஒரு வலிமையையும் அர்த்தத்தையும் பெறுகிறது. அது அனனியா மற்றும் சப்பீராளின் பாவத்திற்கு மிகவும் நெருக்கமாக ஒத்தாக இருந்தது. அவர்கள் தங்கள் சொத்துக்களை கர்த்தருடைய ஊழியத்திற்கென்று அர்ப்பணித்திருந்தார்கள். பிறகு அர்ப்பணிக்கப்பட்ட சொத்தின் ஒரு பகுதியை திரும்பவும் எடுத்துக்கொள்ள முயற்சித்தார்கள். அவர்கள் தேவனிடமிருந்து திருடினார்கள். அவர்கள் தேவனிடம் கொடுத்திருந்ததை திரும்ப திருடுபவர்கள். இந்த வகுப்பார் விசேஷமாக ஆகானை குறிப்பிட்டார்கள். அவன் திருடினான் சகோதரர்களிடமிருந்து அல்ல. கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தவைகளை, கர்த்தரிடமிருந்து திருடினான்.

கிறிஸ்தவன் என்ற பெயர் இன்றைக்கு ஒரு மிகவும் பரந்த பிரயோகத்தை பெற்றிருக்கிறது. அது இன்னும் பொதுவாக நாகரீகம் அடைந்த மனிதனைக் குறிக்கிறது. ஆனால் கிறிஸ்தவன் என்ற வார்த்தை மனுக்குலத்தின் சிறு வகுப்பாரையே சேர்ந்ததாக இருக்கிறது. அவர்கள் இயேசுவை விசுவாசித்து, அவரது சீஷர்களாக அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுவர்களாக இருக்கும்படி தங்களது வாழ்க்கையை அர்ப்பணித்தவர்கள். ''ஒருவன் எனக்கு சீஷனாயிருக்க விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னை பின்பற்றக்கடவன்'' என்கிற நிபந்தனையை ஏற்றுக்கொண்டவர்கள். மெய்யான கானானுக்குள் நுழைந்த இந்த வகுப்பார் இஸ்ரயேலர்களால் நிழலாக காண்பிக்கப்பட்டார்கள். இவர்கள் நல்ல போராட்டத்தை போராடி, தங்களது போரில் கிடைத்த கொள்ளைப் பொருட்களெல்லாம் கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டவைகள் என்று அங்கீகரிப்பவர்கள்.

தங்களது சொந்த உண்மைத்தன்மையையும் விசுவாசத்தையும் குறித்து விசாரிக்கிறவர்களுக்கானது அது. கர்த்தருக்கென்று அர்ப்பணிக்கையில் ஒரு பகுதியை நான் எனக்கென்று எடுத்துக்கொண்டிருக்கிறேனா? என்று அவர்கள் ஒவ்வொருவரும் கேட்டுக்கொள்ள வேண்டும். கர்த்தருக்கு அர்ப்பணிக்கப்பட்டதில் ஏதாவது ஒரு பாகத்தை தங்களுக்கென்று வைத்துக்கொண்டால் அவர்கள் மெய்யான ஆகானாக இருக்கும் ஆபத்தில் இருக்கிறார்கள். அவர்கள் சபையிலுள்ள மற்றவர்கள் மேல் தீமையான செல்வாக்கை அப்பியாசப்படுத்துகிற ஆபத்தில் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, ஆகான் விஷயத்தில் அடையாளமாக விளக்கப்பட்ட ஆபத்தில், முற்றிலுமாக அழிந்து போகக்கூடிய இரண்டாம் மரணத்தில், நித்திய அழிவின் ஆபத்தில் இருக்கிறார்கள்.

## விக்கிரகாராதனையான பொருளாசை

பொருளாசை என்பது விக்கிரகாராதனை என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். முதலாவது அது மிகவும் விரும்பக்கூடிய ஒன்றை வைக்கிறது. இந்த விரும்பக்கூடிய பொருள் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமாக இருந்தால், அது தேவனைக்காட்டிலும் மதிப்புக்குரியதாக இருப்பதாக குறிக்கும். அது தேவனுடைய கிருபையைக் காட்டிலும் அதிகமாக விரும்பப்பட்டதாக இருக்கிறது. இந்த கருத்தின்படி பார்த்தால் முழு உலகமும் இன்றைக்கு முழுமையான விக்கிரகாராதனையில் இருக்கிறது. செல்வமும் சந்தோஷமும் மிகவும் ஆராதிக்கக்கூடிய விக்கிரகங்களாக இருக்கின்றன. இவைகள் ஒவ்வொருவருடைய நேரத்தையும் கவனத்தையும் எடுத்துக்கொள்ளுகின்றன. நேரம், பலம், கௌரவம், மனிததன்மை, பெண்மை எல்லாம் இந்த ''விக்கிரகங்களில்'' ஆடம்பரமாக ஊற்றப்படுகிறது. மாறாக, எந்த நல்ல ஈவுகளுக்கும் காரணராகிய மெய்யான தேவன், அவரது சிருஷ்டிகளின் திரளானவர்களிடமிருந்து மிகவும் குறைவான கனத்தையே பெறுகிறார். அவரது பிரமாணங்கள், அவரது சித்தம், அவரது பிரியம் மற்றும் அவரது கிருபை அனைத்தும் அரிதாக சிந்திக்கப்படுகின்றன.

அதன் பலன் என்ன? உலகப்பொருளை ஆராதிப்பது மனுக்குலத்தின் இருதயங்களில் உண்மையான சந்தோஷத்தையும் அல்லது சமாதானத்தையும், திருப்தியையும் கொடுக்கிறதா? சந்தோஷத்தையும் தேடுவதும் அதற்கான நேரத்தையும் திறமையையும் பணத்தையும் அர்ப்பணிப்பதும் திரளான ஜனங்களுக்கு ஆத்தும சந்தோஷத்தையும் கொடுத்ததா? இந்த கேள்விக்கு இல்லை என்றே பதில் கூறப்படும். செல்வமானது பின்தொடரப்பட்டு எல்லா வகையிலும் பூஜிக்கப்படுகிறது. அது சிலருக்கு மட்டுமே தயவு செய்கிறது. அதன் தயவை பெற்றவர்கள் கூட இனிப்புடன் கசப்பையும் பெறுகிறார்கள். அவர்கள் நம்பிக்கை கொண்டு விசுவாசித்தபடி செல்வமானது சந்தோஷத்தையும் சமாதானத்தையும் கொண்டு வரவில்லை. அது கவலையை, குழப்பத்தை, இன்னும் அதிகமான பட்டினியை கொண்டு வந்தது. அதை எப்படி ஈடுகட்டுவது என்பதை அறியாதிருக்கிறார்கள்.

சந்தோஷத்தை தொடர்ந்து தேடுவதும் ஆராதிப்பதும் இப்படியாக இருக்கிறது. சந்தோஷத்தை தேடுவதும் அதை தொடர்ந்து செய்வதும் எப்பொழுதும் தொடர்கிற காரியமாக இருக்கிறது. அதை கிரகித்தல் என்பது சந்தோஷமானதாக இராமல், அதிருப்தியையும் இருதய பசியையும் கொண்டு வருவதாக இருக்கிறது. அதன் பலனால் உலகப்பொருளையும் சந்தோஷத்தையும் ஆராதிப்பவர்கள் வருத்தத்துடனே இருக்கிறார்கள். உலகமானது அதிருப்தியில் இருந்து நாட்கள் செல்லச்செல்ல இன்னும் அதிகமாக அதில் வெளியரங்கமாக வளர்ந்து கொண்டிருக்கிறது.

மனிதனானவன், அதிகமான திருப்தி, களிப்பு, சமாதானம், இளைப்பாறுதல் மற்றும் சந்தோஷத்தை கொடுக்கக்கூடிய அவனது உயர்ந்த, நேர்த்தியான உணர்வுகள் எல்லாம் அவனது மனதின் பயிற்சி மற்றும் தேவனுக்கடுத்த திறமைகளினாலும் பெறும்படியாக அமைக்கப்பட்டிருக்கிறான். பரிசுத்த பவுலின் கூற்றுப்படி, மனிதர்கள் அனைவரும் சுபாவப்படி தேவனைப் பற்றிய உணர்வுகளும் அவரைக் காணும்படியாக விருப்பத்தையும் உடையவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஐயோ, "தேவனை நேசி, எல்லாரையும் நேசி" என்பதின் நீளம், அகலம், உயரம் மற்றும் ஆழத்தின் அறிவின் மூலம் இளைப்பாறுதல் மற்றும் சமாதானத்தை கண்டிருக்கிற தேவனுடைய ஜனங்களில் உயர்ந்தவர்களில் அநேகர், உண்மையான தேவனை காண உலகிற்கு உதவி செய்யாமல் இருப்பது மாத்திரமல்ல. மாறாக அவர்களை தவறாக வழி நடத்துகிறார்கள்.

இருண்ட யுகங்களில் நாம் பெற்ற கொடூரமாக தவறாக சித்தரிக்கப்பட்டவைகளை நாம் இருதய பூர்வமாக நிராகரித்திருக்கிறோம். தெய்வீக குணலட்சணம் மற்றும் திட்டத்தை தவறாக சித்தரித்தலை இன்னமும் நாம் உலகிற்கு முன்பாக பிடித்துக்கொண்டு, இப்படி செய்வதின் மூலம் அவர்களை தேவனிடமிருந்தும் வேதாகமத்திலிருந்தும் திருப்பி, உலகப்பொருளை ஆராதித்து சந்தோஷத்தை தேடுவதில் ஆத்துமாவுக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் தேடுகிறார்கள். அது ஏமாற்றத்தையே கொண்டு வரும். தேவன் அன்பாயிருக்கிறார் மற்றும் இயேசு மூலமாக அனைவரும் மீட்கப்பட்டு இளைப்பாறுதலுக்குள் நுழையக்கூடிய ஒரு கிருபையான திட்டத்தை அவர் பெற்றிருக்கிறார் என்கிற வேதாகம போதனைகளை நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். நமது விசுவாச பிரமாணத்தின் கொடூரமான போதனைகளை நாங்கள் நிராகரித்திருக்கிறோம் என்பதை எவ்வளவு காலம் நாம் உலகிற்கு வெளிப்படையாக ஒப்புக்கொள்ளுவோம்!